# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1955 - 2016 පෙබරවාරි මස 19 වැනි සිකුරාදා - 2016.02.19

*1955 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 19 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி IV(அ) - மாகாண சபைகள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் |
|---|---|
| ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும் | - |
| ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - |
| மாகாண சபை அறிவித்தல்கள் | 688 |
| மாகாண சபையின் நானாவித அறிவித்தல்கள் | - |
| துணைவிதிகள் | - |
| பதவிகள் - வெற்றிடம் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| நானாவித அறிவித்தல்கள் | - |


### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்****. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்****, அதாவது 2016, மாச்சு மாதம் 11 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2016, பெப்புருவரி மாதம் 26 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

***2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு***

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**டபிள்யூ. ஏ. ஏ. ஜீ. பொன்சேக்கா,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2016 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# மாகாண சபை அறிவித்தல்கள்

*மத்திய மாகாண மாகாண சபை*

*மத்திய மாகாண மாகாண சபையின் 2015 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க கிராமிய அபிவிருத்தி விஞ்ஞாபனம்*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் மத்திய மாகாணத்தின் மாகாண சபை மூலம் 2015, நவெம்பர் மாதம் 17 ஆந் திகதி ஏற்றுக்கொள்ளப்பட்ட 2015, திசெம்பர் மாதம் 4 ஆந் திகதிய மத்திய மாகாண கௌரவ ஆளுநர் அவர்களால் அனுமதி பெறப்பட்ட மேற்குறிப்பிட்ட விஞ்ஞாபனம் அனைவரும் தெரிந்து கொள்ளும் பொருட்டு இந்த சட்டமூலத்தை வெளியிடுகிறேன்.*

*பிரமித்த பண்டார தென்னகோன்,*
*மத்திய மாகாண விளையாட்டு,*
*இளைஞர் விவகார, மகளிர் விவகார,*
*கிராமிய அபிவிருத்தி மற்றும் கைத்தொழில்*
*அமைச்சர்.*

கெட்டம்பே,
பேராதனை.
*த. பெ. இல. 41,*

**மத்திய மாகாண சபையின் 2015 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க**
**கிராம அபிவிருத்தி நியதிச்சட்ட வரைபுப் பிரதி**

*மத்திய மாகாணத்திற்கான கிராம அபிவிருத்தித் திணைக்களம் ஒன்றை ஏற்படுத்துதல், கிராம அபிவிருத்திச் சங்கங்களைப் பதிவு செய்தல், நடாத்துதல், கிராம அபிவிருத்தி பிரதேச அதிகார சபைகள், மாகாண அதிகார சபைகளை அமைத்தல், நடாத்துதல், மகளிர் அபிவிருத்தி மத்திய நிலையங்களை அமைத்தல், நடாத்துதல் முறைப்படியிலாக்குவதற்காகத் தேவைப்படும் நடைமுறைகளைப் பெற்றுக் கொடுத்தல் உட்பட மத்திய மாகாணத்தின் கிராம அபிவிருத்தி உட்பட அதனுடன் தொடர்புடைய அல்லது அவை பற்றிய பிரித்தெடுக்கப்பட்ட ஏற்பாடுகளை முறைப்படியிலாக்கும் நியதிச்சட்டம் ஒன்றாகும்.*

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் மத்திய மாகாணத்தின் மாகாண சபையினரால் இவ்விதம் விதிக்கப்படுகின்றது.**

*குறுகிய பெயரும் நடைமுறைப் படுத்தப்படும் திகதியும்.*

*1. இந்நியதிச்சட்டம் மத்திய மாகாண சபையின் 2015 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க கிராம அபிவிருத்தி நியதிச்சட்டம் என அறிமுகம் செய்யப்படுவதுடன், மத்திய மாகாண ஆளுநரின் அனுமதி கிடைக்கப்பெற்ற திகதி முதல் இது நடைமுறைக்கு வரும்.*

**பகுதி - I**

**மத்திய மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தைத் தாபித்தல்**

*கிராம அபிவிருத்தி திணைக்களம் ஒன்றை அமைத்தல்.*

*2. மத்திய மாகாணத்திற்குள் கிராம அபிவிருத்தி விடயத்திற்குரிய பணிகளை நிறை வேற்றுவதற்காக (இங்கு இதன் பின்னர் திணைக்களம் என்ற பெயரே அறிமுகம் செய்யப்படும்) மத்திய மாகாணத்தின் கிராம அபிவிருத்தித் திணைக்களம் என அறிமுகம் செய்யப்படும் திணைக்களம் ஒன்று அமைக்கப்படல் வேண்டும்.*

*மத்திய மாகாண கிராம அபிவிருத்தி பணிப்பாளர் ஒருவரை நியமித்தல்.*

*3. திணைக்களத்தின் அதிகாரங்கள், கடமைக் கூறுகள் என்பவற்றைச் செயற்படுத்துவதற்கெனத் திணைக்களத்துக்கு மாகாணப் பணிப்பாளர் ஒருவர் நியமிக்கப்படுதல் வேண்டும். அவர் மத்திய மாகாணத்தின் ஆளுநர் அவர்களால் நியமிக்கப்படுதல் வேண்டும்.*

*திணைக்களத்திற்கான ஏனைய உத்தியோகத்தர்கள் நியமனம்.*

*4. இந்த நியதிச் சட்டத்தின் அதிகாரங்கள், பணிகள், செயற்பாடுகளை நிறைவேற்றுவதில் கிராம அபிவிருத்தி மாகாணப் பணிப்பாளருக்கு உதவுவதற்காகத் தேவைப்படும் ஏனைய உத்தியோகத்தர்கள், ஆளணிக் குழு அனைத்தும் 1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க மாகாண சபையின் நியதிச்சட்ட ஏற்பாடுகளுக்கமைய நியமனம் செய்யப்படுதல் வேண்டும்.*

*5. விடயப் பொறுப்பு அமைச்சரது அங்கீகாரத்துடன், அமைச்சின் செயலாளர் தேவையெனத் தீர்மானிக்கும் பட்சத்தில் கண்டி, மாத்தளை மற்றும் நுவரெலியா மாவட்டங்களில் மாவட்ட அலுவலகங்களை அமைத்துக்கொள்ள முடியும்.*

*அதிகாரங்கள் கடமைகள் ஒப்படைத்தல்.*

*6. மாகாணப் பணிப்பாளரது அதிகாரங்கள், செயற்பாடுகள் அனைத்தும் மேலே 4 ஆவது பிரிவின்கீழ் நியமனம் செய்யப்படும் உத்தியோகத்தர்களிடம் ஒப்படைக்கப்படலாம்.*

7. திணைக்களத்தின் குறிக்கோள்கள் பின்வருமாறு அமைதல் வேண்டும்:- *திணைக்களத்தின் நோக்கங்கள்.*

(அ) கிராம அபிவிருத்திச் சங்கங்கள், கிராம அபிவிருத்திக் கிராமப்புற பிரசைகளின் பங்களிப்புடன் கிராம அபிவிருத்தி கருத்திட்டங்களை நிறைவேற்றத் தேவைப்படும் கிராம அபிவிருத்திச் சங்கங்களையும் அதன் அதிகார சபைகளையும் அமைத்தல், நடாத்துதல், வலுவுறச் செய்தல்;

(ஆ) கிராமிய மக்களினால் இனங்காணப்படும் இன்றியமையாத உட்கட்டமைப்பு வசதிகளை, கருத்திட்டங்களை உரிய மக்களின் பங்களிப்புடன் அபிவிருத்தி செய்தல்;

(இ) நிலையான கிராம அபிவிருத்திக்குத் தேவையான கிராமிய சமூக அபிவிருத்திச் செயற்றிட்டங்களையும் கிராமிய பொருளாதாரத்தைத் தோற்றுவிக்கும் செயற்றிட்டங்களையும் செயற்படுத்துதல்;

(ஈ) கிராமிய தலைமைத்துவ அபிவிருத்திக்குத் தேவைப்படும் பயிற்சிகள், ஆலோசனைகளை வலுவுறச் செய்வதினூடாக கிராமிய மக்களதும் திணைக்கள அலுவலர்களதும் கொள்திறனை அபிவிருத்தி செய்தல்.

8. திணைக்களத்தின் அதிகாரங்களும் கடமைக் கூறுகளும் பின்வருமாறு இருத்தல் வேண்டும் :- *திணைக்களத்தின் அதிகாரங்களும் கடமைகளும்.*

(அ) கிராம அபிவிருத்திச் சங்கங்கள், கிராம அபிவிருத்தி பிரதேச அதிகார சபைகள், கிராம அபிவிருத்தி மாகாண அதிகார சபைகளை அமைத்தல், பதிவு செய்தல், நிருவாக முகாமை செய்தல், மேற்பார்வை செய்தல், கலைத்துவிடுதல், மற்றும் கணக்காய்வு செய்தல்;

(ஆ) கிராமப்புற மகளிர் அபிவிருத்தி மத்திய நிலையங்களை அமைத்தல், நிர்வகித்தல், முகாமை செய்தல், நடாத்துதல், மேற்பார்வை செய்தல்;

(இ) கிராமப்புற மகளிர் அபிவிருத்தி மத்திய நிலையங்களில் பயன்பெறுவோருக்கு தேவைப்படும் தொழிற் பயிற்சிகளைப் பெற்றுக் கொடுத்தல் மூலமாக அவர்களை சுயதொழில் முயற்சிகளில் ஈடுபடச் செய்தல்;

(ஈ) கிராம அபிவிருத்தித் திட்டங்களைத் திட்டமிடுதல், செயற்படுத்துதல் மற்றும் மதிப்பீடு செய்தல்;

(உ) இந்தத் திணைக்களத்தின் கருமங்களை மேற்கொள்வதில் தேவை எனக் கருதப்படும் உதவிகளை அரச, மாகாணசபை, உள்ளூராட்சி அமையங்கள் அல்லது ஏனைய சட்டவாக்க ஆட்களிடமிருந்து பெற்றுக்கொள்ளல்;

(ஊ) மக்களுடைய வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்தக் கூடிய வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல், நடாத்துதல், அவற்றின் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல்;

(எ) கிராமிய மக்களதும் திணைக்கள அலுவலர்களதும் கொள்ளளவு அபிவிருத்திக்கெனத் தேவையான பயிற்சித் திட்டங்களை நடத்துதல்;

(ஏ) கிராமிய அபிவிருத்தியில் பங்களிப்புச் செய்யும் அரச, மாகாண சபை, உள்ளூராட்சி அமையங்கள் மற்றும் அரச சார்பற்ற தாபனங்கள் என்பவற்றுடன் இணைப்பை ஏற்படுத்திச் செல்லல்;

(ஐ) கிராம அபிவிருத்திக்குத் தேவையான இனங்காணப்பட்ட சமூக, பொருளாதார, கலாசார நிகழ்ச்சித் திட்டங்களைச் செயற்படுத்துதல்;

(ஒ) ஏதும் வழங்கல்கள், அன்பளிப்புக்கள், உத்தேசங்கள், ஏற்பாடுகள் என்பவற்றுக்கமைய அல்லது ஏனைய ஏதும் வழிகளில் இதன்மீது சாட்டப்படக்கூடிய ஏதும் அசையும் அல்லது அசையாத சொத்துக்களது உரிமை இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 1978 ஆம் ஆண்டின் அரசியல் அமைப்புக்கமையவும், 1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டத்திற்கமையவும் வகித்தல்;

(ஓ) இந்த நியதிச் சட்டத்தில் நிர்ணயிக்கப்பட்டு சுட்டிக்காட்டப்படும் குறிக்கோள்கள், செயற்பாடுகள் தொடர்பாக அல்லது அவற்றுடன் தொடர்புடைய சகல விடயங்கள் பற்றியும் செயற்படுதல்;

(ஔ) கிராம அபிவிருத்திச் சங்கங்கள், கிராம அபிவிருத்திப் பிரதேச அதிகார சபைகள், கிராம அபிவிருத்தி மாகாண அதிகார சபை என்பவை முன்வைக்கும் நிதி மற்றும் கணக்கு அறிக்கைகளைக் கணக்காய்வு செய்வதும், மற்றும் ஏதேனும் நிதி மோசடிகள் கண்டுபிடிக்கப்பட்டால், அவை தொடர்பாகச் சட்ட நடவடிக்கை எடுப்பதும்.

## பகுதி - II

### கிராம அபிவிருத்திச் சங்கங்கள்

*கிராம அபிவிருத்திச் சங்கம் அமைத்தல்.*

9. மாகாணப் பணிப்பாளரினால் நிர்ணயிக்கப்பட்டு சுட்டிக்காட்டப்படும் ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவுக்கும் அல்லது கிராம அலுவலர் பிரிவுகளில் ஏதாவதொரு பகுதிக்கும் அல்லது கிராம அலுவலர் பகுதிகளின் ஒரு சில பகுதிகளுக்கும் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் அமைக்கப்பட முடியும்.

*கிராம அபிவிருத்தி சங்கம் ஒன்றின் குறிக்கோள்.*

10. கிராம அபிவிருத்திச் சங்கமொன்றின் குறிக்கோள்களாக அமைய வேண்டியவை:-

(அ) கலாசார முறைமைகளை மேம்படச் செய்வதும், தேசிய தனித்துவத்தைப் பேணிப் பாதுகாத்துக் கொள்வதும்;

(ஆ) கிராம அபிவிருத்திக்கு அடிப்படையான ஒற்றுமை, நல்லிணக்கம் சுயநம்பிக்கையைக் கொண்டுள்ள வர்களிடம் தலைமைத்துவத்தை வழங்குதல்;

(இ) கிராமப்புறங்களில் பரவலாகக் காணப்படும் சக்திகளை இனங்கண்டு, சுற்றாடல் சமநிலைக்கு முன்னுரிமை வழங்கி, கிராமப்புற மக்களுடைய அபிவிருத்திக்கு அடிப்படையாகும் வள முகாமைத்துவம் ஒன்றை ஏற்படுத்துதல்;

(ஈ) மக்களுக்குத் தேவைப்படும் உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதலும் அபிவிருத்தி செய்தலும்;

(உ) குடும்ப அலகை வலுவுறச் செய்தல், ஒற்றுமை நல்லெண்ண இயக்கப்பாடுகளை ஏற்படுத்துதல், மகளிர், சிறுவர் அபிவிருத்தியை ஏற்படுத்துதல்.

*கிராம அபிவிருத்தி சங்கம் ஒன்றின் அதிகாரங்கள்.*

11. திணைக்களத்தின் வழிகாட்டல், மேற்பார்வைகளுக்கமையக் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் அதிகாரங்களும் கடமைக்கூறுகளும் அமையவேண்டியது:-

(அ) அபிவிருத்திப் பணிகளுக்காகக் காணிகளையும், நிதி மற்றும் பொருட்கள் கருவிகள் போன்றவற்றைச் சட்டப்படி நன்கொடையாகப் பெற்றுக் கொள்ளல்;

(ஆ) காணி / சொத்துடைமைகளை விலைக்கு, குத்தகைக்கு, வாடகைக்கு வாங்குவதற்கு அவற்றிற்கான ஒப்பந்தத்திற்கு வருதல்;

(இ) அபிவிருத்தித் தேவைகளுக்காக காணி அல்லது சொத்துடைமைகளை குத்தகைக்குவிடுதல், வாடகைக்குவிடுதல், ஒப்படைத்தல்களும் அவற்றிற்கான ஒப்பந்தத்திற்கு வருதலும்;

(ஈ) அபிவிருத்திச் சேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக மாகாண நிதி நியமங்களுக்கமையவும், நிதிச் சுற்றறிக்கைகளுக்கு அமையவும், அரச மற்றும் அரச சார்பற்ற அமையங்களிடமிருந்து ஒப்பந்தங்களைப் பெற்றுக் கொள்வதற்கென முன்வருதல்;

(உ) கிராம அபிவிருத்திச் சங்கத்தின் நோக்கங்களைச் செயற்படுத்துவதற்கெனத் தேவைப்படும் பிரித்தெடுக்கப்பட்ட ஏனைய அதிகாரங்கள்;

(ஊ) ஒவ்வொரு கிராம அபிவிருத்திச் சங்கமும் பிறந்த வருடத்தின் மாச்சு மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் அதற்கு முந்தைய வருடத்துக்கான சங்கத்தின் நிதி நிலைமையைக் காட்டும் அறிக்கையை கிராம அபிவிருத்தி மாகாணப் பணிப்பாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

*கிராம அபிவிருத்திச் சங்க நியதிச் சட்டத்தின் ஏற்பாடுகள்.*

12. (அ) ஒவ்வொரு கிராம அபிவிருத்திச் சங்கத்திலும் கிராம அபிவிருத்திச்சங்க நியதிச்சட்டம் ஒன்றில் உள்ளடக்கப்பட வேண்டிய நடைமுறைகள் நிதி மற்றும் கிராம அபிவிருத்திச் சங்கமொன்றை நடாத்திச் செல்லத் தேவையான ஏற்பாடுகளைக் கொண்ட யாப்பொன்று இருத்தல் வேண்டும் என்பதுடன், மாகாணப் பணிப்பாளரது பரிந்துரையின் கீழ் குறித்த யாப்பில் உள்ளடங்கக்கூடிய பொது ஏற்பாடுகளை அமைச்சின் செயலாளர் காலத்துக்குக் காலம் விதிக்க முடியும்;

(ஆ) சங்கத்தின் தேவைக்கேற்றவாறு பொது ஏற்பாடுகளுடன் முரணாகாத வகையில் யாப்பைத் தயாரித்துக்கொள்ள சங்கத்துக்கு இயலுமாகும்;

*கிராம அபிவிருத்திச் சங்க நிதியம்.*

13. கிராம அபிவிருத்திச்சங்க நியதிச் சட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள ஏற்பாடுகளின் கீழ் கிராம அபிவிருத்திச் சங்கமொன்றிற்கு நிதியமொன்றை நடாத்திச் செல்ல முடியும் என்பதுடன், அந்நிதியம் அரச வங்கி ஒன்றில் பேணப்பட்டு வருதல் வேண்டும்.

## பகுதி – III

### கிராம அபிவிருத்தி பிரதேச அதிகார சபை

14. பிரதேச செயலாளர் பிரிவொன்றில் அமைந்துள்ள சகல கிராம அபிவிருத்திச் சங்கங்களையும் ஒன்றிணைத்து மத்திய மாகாணத்தின் சகல பிரதேச செயலாளர் பிரிவுகளிலும், கிராம அபிவிருத்தி பிரதேச அதிகாரசபையொன்று வீதம் நடாத்தப்படுதல் வேண்டும். சகல கிராம அபிவிருத்திச் சங்கங்களில் இருந்து தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர்களும் பிரதேச அதிகார சபையின் அங்கத்தவராகக் கொள்ளப்படுதல் வேண்டும். இதற்கெனப் பிரதேச செயலாளர் பிரிவுக்குள் பதிவுபெற்றுள்ள கிராம அபிவிருத்திச் சங்கம் ஒன்றிலிருந்து ஒரு பிரதிநிதி வீதம் பெயரிடப்பட இயலும். கிராம அபிவிருத்தி பிரதேச அதிகார சபை.

15. கிராம அபிவிருத்தி பிரதேச அதிகார சபையின் குறிக்கோள்களாவன- கிராம அபிவிருத்தி அதிகாரசபை ஒன்றின் நோக்கம்.

(அ) பிரதேசத்தின் அபிவிருத்திக்காகக் குறித்த பிரிவின் பொது மக்களதும் சிவில் மக்களதும் செயற்படு பங்களிப்பை பெற்றுக் கொள்ளல்;

(ஆ) கிராம அபிவிருத்திச் சங்கங்களிடையே உள்ளகத் தொடர்புகளை வளர்ச்சியுறச் செய்தல்;

(இ) பிரிவிலுள்ள கிராம அபிவிருத்திச் சங்கம் அல்லது சங்கங்களது வேண்டுகோளின்படி,

(i) அதிகாரசபைகள் பிரதேசத்தின் ஒன்றிணைந்த அபிவிருத்திக்கான வேலைத்திட்டமொன்றைத் திட்டமிடுதல்;

(ii) சமூக நலனோம்பல் வேலைகளை நடத்திச் செல்லுதல்;

(ஈ) அதிகாரசபையூடாக சமூக நலனோம்பல் சேவைகளை நடாத்திச் செல்லுதல்;

(உ) அங்கத்துவ சங்கங்களின் மூலதனத் தேவைகள் உட்பட ஏனைய தேவைகளுக்காக நிதியங்களை ஏற்படுத்திக் கொள்ளல்.

16. கிராம அபிவிருத்தி பிரதேச அதிகார சபையொன்றின் அதிகாரங்களும் கடமைகளுமாவன- அதிகாரங்களும் கடமைகளும்.

(அ) அங்கத்துவச் சங்கங்களின் செயற்பாடுகளை நடாத்திச் செல்வதற்கு தேவையான அறிவுறுத்தல்களைப் பெற்றுக் கொடுத்தல்;

(ஆ) அங்கத்துவச் சங்கங்களின் மூலதனத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக நிதியங்களை ஏற்படுத்திக் கொடுத்தல், அவற்றை நடத்திச் செல்லுதல்;

(இ) அங்கத்துவ சங்கங்களுக்குக் குறைந்த வட்டி வீதத்தில் கடனுதவிகளை வழங்குதல்;

(ஈ) கிராம அபிவிருத்திச் சங்கங்கள் தமது யாப்பின்படி செயற்படுவதற்கு உதவுதல்;

(உ) பிரதேச செயலாளர் பிரிவில் மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்திச் செயற்பாடுகளை பரவலாக்குதலும், சமூக நலனோம்பல் வேலைகளைச் செய்தலும்;

(ஊ) ஒவ்வொரு பிரதேச அபிவிருத்தி அதிகார சபையும் நடப்பு வருடத்தின் மாச்சு மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் அதற்கு முந்தைய வருடத்துக்கான சங்கத்தின் நிதி நிலைமையைக் காட்டும் அறிக்கையை கிராம அபிவிருத்தி மாகாணப் பணிப்பாளரிடம் அல்லது மாவட்ட கிராம அபிவிருத்தி அலுவலரிடம் சமர்ப்பித்தல் வேண்டும்;

(எ) மேற்கூறிய 15 ஆவது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களை அடைந்துகொள்வதில் ஏனைய நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுதல்.

17. கிராம அபிவிருத்தி பிரதேச அதிகார சபையைக் கூட்டுதல், மதிப்பிடுதல் என்பன மாகாண கிராம அபிவிருத்தி பணிப்பாளர் அல்லது அவரால் அதிகாரம் வழங்கப்பட்ட அலுவலரால் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். அழைப்பும் மேற்பார்வையும்.

18. (அ) ஒவ்வொரு கிராம அபிவிருத்திப் பிரதேச அதிகார சபையினதும், அதன் உள்ளடக்கம், நிதியம், மற்றும் கிராம அபிவிருத்தி பிரதேச அதிகாரசபையை நடத்திச் செல்லத் தேவையான ஏனைய ஏற்பாடுகளைக் கொண்டுள்ள யாப்பொன்று இருத்தல் வேண்டும். மாகாணப் பணிப்பாளரது பரிந்துரையின் கீழ் யாப்பொன்றில் உள்ளடங்கப்பட வேண்டிய பொது ஏற்பாடுகள் அமைச்சின் செயலாளரால் காலத்துக்குக் காலம் விதிக்கப்பட முடியும். கிராம அபிவிருத்தி பிரதேச அதிகார சபை யாப்பின் ஏற்பாடுகள்.

(ஆ) பிரதேசத்தின் தேவைக்கேற்றவாறு பொது ஏற்பாடுகளுக்கு முரணாகாத விதத்தில் அதிகார சபைகளது யாப்பை அமைப்பதற்குப் பிரதேச அதிகார சபைக்கு இயலுமை உண்டு.

19. கிராம அபிவிருத்திப் பிரதேச அதிகார சபையின் யாப்பில் காட்டப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கமையக் கிராம அபிவிருத்திப் பிரதேச அதிகாரசபைக்குப் பிரதேச நிதியமொன்றை நடத்திச் செல்ல இயலும். குறித்த நிதியம் அரச வங்கியொன்றில் பேணப்பட்டு வருதல் வேண்டும். கிராம அபிவிருத்தி பிரதேச அதிகார சபையின் நிதியம்.

## பகுதி – IV

### கிராம அபிவிருத்தி மாகாண அதிகாரசபை

*கிராம அபிவிருத்தி மாகாண அதிகாரசபை அமைத்தல்.*

20. மத்திய மாகாணத்துக்கென கிராம அபிவிருத்தி மாகாண அதிகார சபையொன்று தாபிக்கப்படுதல் வேண்டும்.

*கிராம அபிவிருத்தி மாகாண அதிகாரசபை அமைவு.*

21. ஒவ்வொரு பிரதேச அதிகாரசபையும் பெயர் குறிப்பிடும் ஒவ்வொரு பிரதிநிதி வீதம் இதில் அங்கத்துவம் பெறுதல் வேண்டும்.

*கிராம அபிவிருத்தி மாகாண அதிகாரசபையின் குறிக்கோள்கள்.*

22. கிராம அபிவிருத்தி மாகாண அதிகார சபையொன்றின் நோக்கங்களாவன-

(அ) கிராம அபிவிருத்தி பிரதேச அதிகார சபை, கிராம அபிவிருத்திச் சங்கங்கள் பற்றிய இந்நிகழ்ச்சித் திட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள ஏதாவதொரு விஞ்ஞாபனத்தை நிறைவேற்றிக் கொள்வதற்கு தேவைப்படும் தலைமைத்துவத்தை வழங்குதலும், ஒத்துழைப்பைக் காட்டுவதும்;

(ஆ) மத்திய மாகாணத்துக்குள் செயற்படும் கிராம அபிவிருத்தி வேலைத்திட்டங்களை மேற்பார்வை செய்தல், முன்னோடி செய்தல், மதிப்பீடு செய்தல்;

(இ) மத்திய மாகாணத்துக்குள் கிராம அபிவிருத்திகள் தொடர்பாக அரச மற்றும் அரச சார்பற்ற தாபனங்களது ஒத்துழைப்பை உறுதி செய்தல்;

(ஈ) மத்திய மாகாணத்துக்குள் கிராம அபிவிருத்திப் பிரதேச அதிகார சபைகளின் வேலைத்திட்டங்களை ஒன்றிணைத்தல்;

(உ) மத்திய மாகாணத்துக்குள் தாபிக்கப்பட்டுள்ள கிராமிய மகளிர் அபிவிருத்தி நிலையங்களது நடவடிக்கைகளை ஒன்றிணைப்பதும், அபிவிருத்திக்குத் தேவையான உதவிகளை வழங்குதலும்.

*அதிகாரசபை செயற்பாடுகள்.*

23. கிராம அபிவிருத்தி மாகாண அதிகார சபையினது செயற்பாடுகளாவன-

(அ) மத்திய மாகாணத்துக்குள் கிராம அபிவிருத்தி வேலைத்திட்டங்கள், கருத்திட்டங்கள் பற்றிய ஆய்வுகளை மேற்கொள்ளல்;

(ஆ) கிராம அபிவிருத்தி வேலைத்திட்டங்களைச் செயற்படுத்தும்போது தேவைப்படக்கூடியவாறு மாகாணத்துக்குள் ஏதும் அரச, அரச சார்பற்ற மற்றும் தனியார் நிறுவனங்களுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ளல்;

(இ) மத்திய மாகாணத்துக்குள் கிராம அபிவிருத்தி தொடர்பில் பிரதேச அதிகார சபை முன்வைக்கும் வேலைத்திட்டங்களை வினைத்திறன் மிக்க விதத்தில் இயக்குவதற்கான பிரேரணைகள், கருத்துக்கள் கவனத்திற் கொள்ளலும் அவற்றை திணைக்களத்திற்கு சமர்ப்பித்தலும் ;

(ஈ) குறைந்த பட்சம் ஒரு வருடத்தில் மும்முறை முன்னேற்ற மீளாய்வுக் கலந்துரையாடல் கூட்டங்களை ஏற்பாடு செய்தலும், முன்னேற்ற அறிக்கைகளைத் தயாரித்தலும்;

(உ) ஒவ்வொரு மாகாண அபிவிருத்தி அதிகாரசபையும் நிலவும் வருடத்தின் மாச்சு மாதம் 31 ஆந் திகதிக்கு முன்னர் அதற்கு முந்தைய வருடத்துக்கான சங்கத்தின் நிதி நிலைமையைக் காட்டும் அறிக்கையை கிராம அபிவிருத்தி மாகாணப் பணிப்பாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

*கிராம அபிவிருத்தி மாகாண அதிகார சபையின் யாப்பு.*

24. (அ) கிராம அபிவிருத்தி மாகாண அதிகார சபையிடம் கிராம அபிவிருத்தி மாகாண அதிகார சபையின் உள்ளடக்கம், நிதியம், மற்றும் கிராம அபிவிருத்தி மாகாண அதிகாரசபையை நடத்திச் செல்லத் தேவையான ஏனைய ஏற்பாடுகளைக் கொண்டுள்ள யாப்பொன்று இருத்தல் வேண்டும். மாகாணப் பணிப்பாளரது பரிந்துரையின் கீழ் யாப்பொன்றில் உள்ளடங்கப்பட வேண்டிய பொது ஏற்பாடுகள் அமைச்சின் செயலாளரால் காலத்துக்குக் காலம் விதிக்கப்பட முடியும்.

(ஆ) மாகாண அதிகார சபையின் தேவைக்கேற்றவாறு பொது ஏற்பாடுகளுக்கு முரணாகாத விதத்தில் அதிகார சபையின் யாப்பை அமைப்பதற்கு அதிகார சபைக்கு இயலுமை உண்டு.

*25.* கிராம அபிவிருத்தி மாகாண அதிகார சபையின் யாப்பில் காட்டப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைய கிராம அபிவிருத்தி அதிகார சபைக்கு அதிகார சபை நிதியமொன்றை நடத்திச்செல்ல முடியும். குறித்த நிதியத்தை அரச வங்கியொன்றில் பேணிவருதல் வேண்டும். *கிராம அபிவிருத்தி மாகாண அதிகார சபை நிதியம்.*

*26.* கிராம அபிவிருத்தி மாகாண அதிகாரசபையைக் கூட்டுவது, மதிப்பிடுவது என்பவை மாகாணப் பணிப்பாளரால் அல்லது அவரது அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிப் பணிப்பாளர் அல்லது உதவிப் பணிப்பாளரால் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். *அழைப்பும் மேற்பார்வையும்.*

## பகுதி – V

## கிராம அபிவிருத்திச் சங்கங்கள் மற்றும் அதிகார சபைகளைப் பதிவு செய்தல்

*27.* சகல கிராம அபிவிருத்திச் சங்கங்களும் பிரதேச, மாவட்ட, மாகாண மட்டத்திலான அதிகார சபைகளும் மாகாண பணிப்பாளரின் கீழ் பதிவு செய்யப்படுதல் வேண்டும். *கிராம அபிவிருத்திச் சங்கம், அதிகாரசபை பதிவு செய்தல்.*

*28.* 27 ஆவது பிரிவின் கீழ் பதிவு செய்யப்படும் செயற்பாடுகளுக்குத் தேவைப்படும் விதிமுறைகள் முதலான அனைத்து விடயங்களும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரினால் நிர்ணயிக்கப்படும். *பதிவு செய்வதற்கான விதிமுறைகள்.*

*29.* 28 ஆம் வாசகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகளூடாக சுட்டிக்காட்டப்படும் நடைமுறைகளுக்கு இயைவாக கிராம அபிவிருத்திச் சங்கங்கள், பிரதேச மாவட்ட, மாகாண அதிகார சபைகளினால் மாகாணப் பணிப்பாளரிடம் பதிவுக்கான விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும். *பதிவுகளுக்காக விண்ணப்பித்தல்.*

*30.* கிராம அபிவிருத்திச் சங்கங்கள், பிரதேச மாவட்ட, மாகாண அதிகாரசபைகள் தம்மை பதிவு செய்து கொள்வதற்காக சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பப்படிவங்கள் அனைத்தும் பணிப்பாளரினால் பதிவுகளுக்குரிய தேவைகளைப் பூர்த்தி செய்திருப்பதாகத் திருப்தியடையும் பட்சத்தில் அச்சங்கங்களை, அதிகார சபைகளைப் பதிவு செய்து கொள்ள வேண்டும். *பதிவுச் சான்றிதழ்கள் வழங்குதல்.*

*31.* கிராம அபிவிருத்திச் சங்கங்கள், பிரதேச மாவட்ட அதிகார சபைகளினால் பதிவுகளுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள விண்ணப்பங்கள் பதிவுக்குரிய தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளவில்லை என பணிப்பாளர் அவர்கள் கருதும் பட்சத்தில் பதிவுகளை மறுத்துவிடலாம். பதிவை மறுப்பதற்கான காரணங்களை உரிய சங்கத்துக்கோ அல்லது அதிகாரசபைக்கோ அவை மறுக்கப்பட்ட 14 நாட்களுக்குள் எழுத்துமூலம் அறிவித்தல் வேண்டும். *பதிவு செய்ய மறுத்தல்.*

*32.* பதிவுக்காக முன்வைக்கப்பட்ட விண்ணப்பங்களது பதிவுகள் மறுக்கப்படும் சந்தர்ப்பங்களில் அது தொடர்பான மேன்முறையீடு, மறுக்கப்பட்ட 30 நாட்களுக்குள் அமைச்சின் செயலாளரிடம் சமர்ப்பிக்கலாம். அது தொடர்பில் விடயத்திற்குப் பொறுப்பான செயலாளரின் தீர்மானமே இறுதியானதாகும். *மேன் முறையீடு சமர்ப்பித்தல்.*

*33.* கிராம அபிவிருத்திச் சங்கம் ஒன்று அல்லது அதிகார சபையொன்று பதிவு செய்து கொள்ளப்பட்டதன் காரணமாக, அதனை பதிவு செய்து கொண்ட பெயரின் கீழ் தொடர்ந்து நிலவும் ஒரு பொது முத்திரையுடனும் உடமைகளுடனும் இருத்தலும், ஒப்பந்தங்களுக்கு உட்படலும், வழக்குகள் உட்பட மற்றும் ஆவணங்களை ஒப்படைத்தலும் தொடர்பான விளக்கங்கள் கூறக்கூடிய அதிகாரம் உள்ள கூட்டிணைப்பாகும். *பதிவு பெற்ற கிராம அபிவிருத்திச் சங்கங்களும் அதிகார சபைகளும் யாக்கமாக ஆக்கப்படுதல்.*

## பகுதி – VI

## கிராமிய மகளிர் அபிவிருத்தி மத்திய நிலையங்கள்

*34.* மத்திய மாகாணத்தில் வாழும் கிராமப்புற மகளிரது பொருளாதார சக்தியையும் ஆற்றல்களையும் வளர்த்துக் கொள்ளும் நோக்குடன் பிரதேச செயலாளர் பிரிவுகள் மட்டத்தில் கிராமிய மகளிர் அபிவிருத்தி மத்திய நிலையமொன்று அமைக்கப்படலாம். குறித்த மத்திய நிலையம் திணைக்களத்தின் மேற்பார்வையின் கீழ் நடத்திச் செல்லப்படுதல் வேண்டும். *மகளிர் மத்திய நிலையம் அமைத்தல்.*

*35.* கிராமிய மகளிர் அபிவிருத்தி மத்திய நிலையங்களூடாக கைப்பணி வேலைகள் பற்றிய தொழில் நிபுணத்துவங்கள் உட்பட கிராமப்புற மகளிரது அபிவிருத்திக்குத் தேவைப்படும் தொழிற்பயிற்சிப் பாடநெறிகளை நடாத்தலாம். *தொழிற் பயிற்சிப் பாடநெறிகள்.*

*36.* மகளிர் அபிவிருத்தி மத்திய நிலையங்களுக்கு பயிற்சியாளர்களைத் தெரிவு செய்தல், நடாத்தப்பட வேண்டிய பாடநெறிகளைத் தீர்மானித்தல் என்பவற்றை மாகாணப் பணிப்பாளரோ அல்லது அவரது அதிகாரம் வழங்கப்பட்ட அலுவலரோ தீர்மானிக்கலாம். *பயிற்சியாளர்களைத் தெரிவு செய்தலும் பாட நெறிகளைத் தீர்மானித்தலும்.*

பகுதி – VII

**பொது ஏற்பாடுகள்**

நியதிச் சட்டத்திற்கான சட்டங்களை விதித்தல்.

37. (அ) இந்நியதிச்சட்ட 8 ஆம் பிரிவின் கீழ் குறிக்கோள்களை எய்துவதற்காக தேவைப்படும் நடைமுறைகளை செயற்படுத்துவதற்கும்,

(ஆ) சங்கங்கள், பிரதேச அதிகார சபைகள் மற்றும் மாகாண அதிகார சபையின் கடமைக்கூறுகளையும் அதிகாரங்களையும் செயற்படுத்துவதற்கு இயலுமாகும் விதத்தில் இடைக்கிடை தேவைப்படும் ஒழுங்குவிதிகளை விதிப்பதற்கும், மேற்காட்டிய 28ஆவது பிரிவை நடைமுறைப்படுத்துவதற்கும் ஏற்பாடுகளைச் செய்யத் தேவையான விதிகளைச் செய்ய அமைச்சருக்கு அதிகாரமுண்டு.

சங்கங்களதும் அதிகார சபைகளதும் கணக்காய்வு.

38. கிராம அபிவிருத்திச் சங்கங்கள், பிரதேச அதிகார சபைகள் மற்றும் மாகாண அதிகார சபை என்பவற்றைக் கணக்காய்வுக்கு உட்படுத்தும் அதிகாரம் கிராம அபிவிருத்தி மாகாணப் பணிப்பாளருக்கு வழங்கப்படுகின்றது. குறித்த கணக்காய்வின்போது இனங்காணப்படும் ஏதும் நிதி மோசடிகள் இருப்பின், அவை தொடர்பில் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளும் அதிகாரமும் பணிப்பாளருக்கு உண்டு. கணக்காய்வின்போது இனங்காணப்பட்ட அவ்வாறான நிதி மோசடிகள் பற்றிப் பணிப்பாளர் வழங்கும் சான்றிதழ், அவரிடமிருந்து அல்லது அவர்களிடமிருந்து அறவிடப்படவேண்டிய தொகை பற்றிய முக்கியமான சாட்சியாக அமையும்.

39. மேற்குறிப்பிடப்பட்டுள்ள 37 ஆவது பிரிவின் விதப்புரைகளுக்கு அமைய விதிக்கப்படும் சகல விதமான ஒழுங்கு விதிகளும் அமைச்சரினால் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும். அத்துடன், வெளியிடப்பட்ட 3 மாதங்களுக்குள் மாகாண சபையில் முன்வைக்கப்பட்டு நிறைவேற்றிக்கொள்ளல் வேண்டும்.

பதிவின்போதும் கணக்காய்வின் போதும் பிரதேச செயலாளரது பரிந்துரை.

40. பிரதேச செயலாளர் பிரிவுக்குள் கிராம அபிவிருத்திச் சங்கங்கள், கிராம அபிவிருத்திப் பிரதேச அதிகாரசபைகள், என்பவற்றை அமைத்தல், பதிவுசெய்தல், மற்றும் கணக்காய்வு செய்தல் போன்ற கருமங்களைச் செய்கையில், பிரதேச செயலாளரது நேரடிக் கண்காணிப்பின் கீழ் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

சங்கங்களதும் அதிகார சபைகளதும் கணக்காய்வு.

41. பிரதேச செயலாளர் பிரிவுக்குள் அமைந்துள்ள கிராம அபிவிருத்திச் சங்கங்கள் மற்றும் கிராம அபிவிருத்திப் பிரதேச அதிகார சபைகள் செயற்படும்போது முறைகேடுகள் அல்லது மோசடிகள் கண்டுபிடிக்கப்பட்டால், குறித்த சங்கங்களையும் பிரதேச அபிவிருத்தி அதிகார சபைகளையும் மாகாண கிராம அபிவிருத்திப் பணிப்பாளரதும், அமைச்சின் செயலாளரதும் பரிந்துரையின் கீழ் கலைத்துவிடும் அதிகாரம் அமைச்சருக்கு உண்டு.

தவறுகளும் தண்டனைகளும்.

42. (அ) இந்நியதிச் சட்டத்தின் ஏதாவதொரு நடைமுறையை அல்லது நியதிச் சட்டத்தின் கீழ் விதிக்கப்பட்டுள்ள ஒழுங்குவிதி ஒன்றை அல்லது ஒரு சட்டத்தின் விதிமுறைகளை மீறிச் செயற்படும் நபர் ஒருவர் இந்நியதிச் சட்டத்தின் கீழ் குற்றவாளியாவதுடன், பொருத்தமான நீதிமன்றம் ஒன்றின் மூலம் வழக்கு விசாரணைகளுக்கும் உள்ளாக்கப்பட்டுக் குற்றவாளியாகக் காணப்பட்டால் ரூபா இரண்டாயிரத்து ஐந்நூற்றைத் தாண்டாத தண்டம் ஒன்றுக்கு அல்லது 6 மாதகாலத்தைத் தாண்டாத வகையின் கீழ் சிறைத் தண்டனைக்கோ அல்லது இரண்டு தண்டனைகளுக்குமோ உட்பட முடியும்.

(ஆ) ஏதுமொரு கிராம அபிவிருத்திச் சங்கம் அல்லது பிரதேச கிராம அபிவிருத்தி அதிகார சபை அல்லது மாகாண அதிகார சபையின் நிதி மோசடிகள் அல்லது நிதி குறைவாகப் பயன்படுத்தியமை தொடர்பில் நீதிமன்றத்தில் முறைப்படும் பட்சத்தில், குறித்த மோசடி அல்லது நிதி குறைவாகப் பயன்படுத்தியமை பற்றிய தொகை, நீதிமன்றத்தினால் விதிக்கப்படும் தண்டப் பணமாகக் கருதி அறவிடப்பட்டு உரிய கிராம அபிவிருத்திச் சங்க/பிரதேச அதிகார சபை, மாகாண அதிகார சபை என்பவற்றின் கணக்கில் வரவில் இடப்படுதல் வேண்டும். மேலும், இந்த நியதிச் சட்டத்தின் கீழ் விதிக்கப்படும் அனைத்து தண்டப்பணமும் மத்திய மாகாண சபையின் பொது நிதியில் வைப்புச் செய்யப்படுதல் வேண்டும்.

**இடைக்கால ஏற்பாடுகள்**

பதவியிலிருக்கும் மாகாணப் பணிப்பாளரும் அலுவலகளும் தொடர்ந்தும் இருத்தல்.

43. குறிப்பிட்ட தினத்துக்கு முன்னர் உள்ளவாறான மாகாணப் பணிப்பாளராகப் பணியாற்றிவருபவர் இந்த வரைவுச் சட்டத்தின் கருமங்களுக்கென 3 ஆவது பிரிவின்படி நியமிக்கப்பட்ட பணிப்பாளராகக் கருதப்படுவதுடன், இந்த வரைவுச் சட்டத்தை நிறைவேற்றுவதற்கு முன்னரான காலத்திலிருந்து பணியாற்றிடும் அலுவலர்கள் மேற்குறித்த 4 ஆவது பிரிவின்படி அலுவலர்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

சொத்துக்கள் பொறுப்புக்கள் பிரிப்புகள் என்பவற்றை மேலும் நடத்திச் செல்லுதல்.

44. (அ) குறிப்பிட்ட தினத்துக்கு முன்னர் உள்ளவாறான கிராம அபிவிருத்தித் திணைக்களத்துக்குச் சொந்தமான சொத்துக்கள் அனைத்தும், பொறுப்புக்கள், அனைத்துக் கடன் பிரிப்புகள், வழக்கு நடவடிக்கைகள் மற்றும் குறித்த திணைக்களத்துடன் செய்யப்பட்ட ஒப்பந்த உடன்படிக்கைகள் அனைத்தும் இந்த வரைவுச்சட்டத்தின் கீழ் ஏற்படுத்தப்பட்ட திணைக்களத்தின் கீழ் இருக்கும் சொத்துக்கள், பொறுப்புக்கள், அனைத்துக் கடன் பிரிப்புகள், வழக்கு நடவடிக்கைகள் அனைத்தும் ஒப்பந்தங்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

(ஆ) குறிப்பிட்ட தினத்துக்கு முன்னர் உள்ளவாறான கிராம அபிவிருத்திச் சங்கம், பிரதேச அதிகார சபை என்பவற்றுக்குச் சொந்தமான சொத்துக்கள், பொறுப்புக்கள், கடன் பிரிப்புக்கள், வழக்கு நடவடிக்கைகள் மற்றும்

சங்கத்துடனும் பிரதேச அதிகார சபையுடனும் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தங்களும், இந்த வரைவுச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டுள்ள சங்கங்கள், பிரதேச அதிகார சபைகளின் கீழ் உள்ள சொத்துக்கள், பொறுப்புக்கள், கடன் பிரிப்புக்கள், வழக்கு நடவடிக்கைகள் எனக் கருதப்படுதல் வேண்டும்.

**கருத்து வெளிப்பாடுகள்**

45. சொற்பதங்களுக்கான கிட்டிய விளக்கம் தேவைப்பட்டாலன்றி- கருத்து வெளிப்பாடுகள்.

"ஆளுநர்" என்பது, மத்திய மாகாண ஆளுநர் அவர்களைக் குறிக்கும்.

"அமைச்சர்" என்பது, மத்திய மாகாணசபையின் கிராம அபிவிருத்தி விடயத்துடன் தொடர்புடைய அமைச்சராகும்.

"அமைச்சின் செயலாளர்" என்பது, மத்திய மாகாணசபையின் கிராம அபிவிருத்தி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சின் செயலாளராவார்.

"பிரதேச செயலாளர்" என்பது, மத்திய மாகாணத்திற்குள் பிரதேச செயலாளர் பிரிவொன்றிற்குப் பொறுப்பான பிரதேச செயலாளர் ஆவார்.

"மாகாண கிராம அபிவிருத்திப் பணிப்பாளர்" என்பது, மத்திய மாகாணத்தின் கிராம அபிவிருத்தி பணிப்பாளர் ஆவார்.

"மாவட்ட கிராம அபிவிருத்தி அலுவலர்" என்பது, மத்திய மாகாண கிராம அபிவிருத்திப் பணிப்பாளரினால் அதிகாரம் வழங்கப்பட்ட குறித்த மாவட்டத்தின் கிராம அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளும் அலுவலராவார்.

"கிராம அபிவிருத்தி அலுவலர்" என்பது, குறித்த பிரதேச செயலகப் பிரிவுக்குள் கிராம அபிவிருத்திக் கருமங்களைச் செயற்படுத்துவதற்கென மத்திய மாகாண கிராம அபிவிருத்திப் பணிப்பாளரினால் அதிகாரம் வழங்கப்பட்டுள்ள அலுவலரைக் குறிக்கும்.

"சங்கம்" என்பது, மத்திய மாகாணத்திற்குள் இயங்கும் கிராம அபிவிருத்திச் சங்கத்தைக் குறிக்கும்.

"அதிகாரசபை" என்பது மத்திய மாகாணத்திற்குள் இயங்கும் கிராம அபிவிருத்தி பிரதேச அதிகார சபை மற்றும் கிராம அபிவிருத்தி மாகாண அதிகார சபை என்பவற்றைக் குறிக்கும்.

"உடமைகள்" என்பது, கிராம அபிவிருத்திச் சங்கம் அல்லது கிராம அபிவிருத்தி அதிகாரசபைக்கு உரித்தான புத்தகங்கள், ஆவணங்கள், கையிருப்புக்கள், வங்கியில் வைக்கப்பட்டுள்ள பணம், தளபாடங்கள், உபகரணங்கள், கட்டடங்கள், காணிகள், செயற்றிட்டங்கள், அசைவுள்ள மற்றும் அசைவற்ற அனைத்துச் சொத்துக்கள் என்பவற்றைக் குறிக்கும்.

"நியதிச்சட்டம்" என்பது மத்திய மாகாண அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்ட கிராம அபிவிருத்திச்சங்கம், கிராம அபிவிருத்தி பிரதேச அதிகாரசபை, கிராம அபிவிருத்தி மாவட்ட அதிகாரசபை, கிராம அபிவிருத்தி மாகாண அதிகார சபைகளுக்காக தயாரிக்கப்பட்ட நியதிச் சட்டங்களாகும்.

"அரச வங்கி" என்பது நிதிச் சட்டத்தின் கீழ் அரச வங்கி என்ற பொருளைத் தரும்.

"அரச சார்பற்ற தாபனங்கள்" என்பது தன்னார்வத் தொண்டு, சமூகசேவை அமையங்கள், (பதிவு மற்றும் மேற்பார்வை) சட்டத்தின் கீழ்பதிவுசெய்யப்பட்ட தன்னார்வத் தொண்டு நிறுவனங்களாகும்.

"மாகாண நிதிச் சட்டம்" என்பது 1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டத்தின் 19 (5) மற்றும் 23 ஆவது பிரிவின்கீழ் மத்திய மாகாண கௌரவ ஆளுநர் அவர்களால் விதிக்கப்பட்டு 2008 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி முதல் செயற்பட்டுவரும் நிதிச் சட்டங்களாகும்.

"குறித்த திகதி" என்பது இந்த வரைவுச்சட்டம் செயற்படுத்தப்படும் திகதியாகும்.

"மகளிர் அபிவிருத்தி மத்திய நிலையம்" என்பது, கிராமியப் பெண்களை ஊக்குவிக்கும் நோக்குடன் தொழிற்பயிற்சித் தேர்ச்சிகளை வழங்குவதற்காக அமைக்கப்பட்டுள்ள நிலையங்களாகும்.

46. இந்த நியதிச்சட்டத்தின் சிங்கள, தமிழ், ஆங்கில வாசகங்களிடையே கருத்து மயக்கம் ஏற்படுமெனின் சிங்கள வாசகங்களே மேலோங்கி நிற்கும். சிங்கள வாசகங்களே மேலோங்கி நிற்கும்.

2-488